## (ஈ) வேலை நிலையும் தொழில் உறவுகளும்

### வேலை நிலை

வருடாந்த மொத்தத் தரவுகள் இல்லாதமையினால், நாட்டிலுள்ள வேலையின்மையின் வருடாந்த நடமாட்டங்களை ஓரளவில் அறிவதற்கு, தொழில் இணைப்புக் காரியாலங்களிற் பதிவுபட்டோரின் எண்ணிக்கை பற்றிய தரவுகள், உதவுகின்றன. 1962ம் ஆண்டு முடிவின்போது, தொழில் இணைப்புக் காரியாலயங்களிற் பதிவுபட்டோரின் எண்ணிக்கை, கடந்த வருட முடிவிலிருந்ததிலும் பார்க்க, 0.6 சதவீதத்தால் உயர்ந்து இருந்தது. 1963ம் ஆண்டின், முதலாம், மூன்றாம் நான்காம் காற்பகுதிகளின் போது, இவ் எண்ணிக்கைகள் சிறிது உயர்வாக இருந்தன. எனினும், பதிவுபட்டோரின் எண்ணிக்கையானது, 1962ம் ஆண்டு, மார்கழி மாத முடிவின் போதிருந்த எண்ணிக்கையாகிய 152209 உடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டு, மார்கழி மாத முடிவின் போது 151922க்கு வீழ்ச்சியுற்றது. நடைமுறை வருடத்தின் போது, தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோர், இலிகிதர் ஆகிய பதிவாளர் களின் எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டதனால் 1963ம் ஆண்டு முடிவின்போது, இப்பதிவாளர்களின் எண்ணிக்கை, 1962ம் ஆண்டு மார்கழி மாத முடிவில் இருந்ததிலும் பார்க்க, 6.2 சதவீதம் கூடியதாக இருந்தது. அரைத்தேர்ச்சி பெற்ற பதிவாளர்களின் எண்ணிக்கையும் 1.8 சதவீதத்தால் சற்று அதிகரித்திருக்கையில், தேர்ச்சி பெற்றோரினதும், தேர்ச்சி பெறாதோரினதும் எண்ணிக்கைகள், நடைமுறை வருடத்தின் போது நிதானமாக வீழ்ச்சியுற்று, 1962ம் ஆண்டு, மார்கழி மாத முடிவிலிருந்தவற்றைவிட முறையே, 4.4 சதவீதத்தாலும், 3.5 சதவீதத்தாலும் குறைவுற்று விளங்கின. அரசாங்கத்துறை, ஓரளவு அரசாங்க ஆதிக்கமுள்ள கூட்டுத்தாபனங்கள், தனிப்பட்டோர்துறை ஆகியவற்றில் 1963ம் ஆண்டு உண்டாக்கப்பட்ட வேலைகள் சம்பந்தமான முழுத் தரவுகளும் கிடைக்கவில்லை.

கடந்த சில ஆண்டுகளில் வேலையிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையையும், ஒவ்வொரு தொகுதியிலுள்ள பதிவாளர்களின் மொத்த எண்ணிக்கையில் வேலையிலமர்த்தப்பட்டோரின் சதவீதத்தையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை II ஈ-1**

**வேலையில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் பதிவு செய்தோரின் மொத்த எண்ணிக்கையில் இவர்களின் சதவீதமும்**

| வருடம் | தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோரும் இலிகிதரும் | % | தேர்ச்சி பெற்றோர் | % | அரைத் தேர்ச்சி பெற்றோர் | % | தேர்ச்சி பெறாதவர்கள் | % | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1953 .. | 1528 | 18·2 | 669 | 10·4 | 1371 | 10·0 | 2820 | 12·2 | 6388 | 12·4 |
| 1954 .. | 1097 | 9·4 | 879 | 11·1 | 922 | 5·7 | 4660 | 17·0 | 7558 | 11·9 |
| 1955 .. | 2166 | 14·9 | 1064 | 12·5 | 1187 | 5·9 | 3791 | 13·6 | 8208 | 11·6 |
| 1956 .. | 1913 | 11·9 | 845 | 8·6 | 1565 | 6·1 | 4162 | 12·1 | 8485 | 9·9 |
| 1957 .. | 1176 | 6·3 | 709 | 5·3 | 1180 | 3·8 | 3053 | 6·4 | 6118 | 5·5 |
| 1958 .. | 1827 | 9·2 | 800 | 5·9 | 1006 | 3·1 | 2251 | 4·4 | 5884 | 5·0 |
| 1959 .. | 1667 | 8·0 | 1045 | 7·5 | 1275 | 3·8 | 3218 | 5·4 | 7205 | 5·6 |
| 1960 .. | 1400 | 5·3 | 771 | 4·6 | 1247 | 3·6 | 4744 | 6·5 | 8162 | 5·4 |
| 1961 .. | 1259 | 4·6 | 631 | 3·5 | 964 | 2·8 | 2794 | 3·9 | 5648 | 3·7 |
| 1962 .. | 1263 | 3·7 | 468 | 2·7 | 809 | 2·3 | 2315 | 3·5 | 4857 | 3·2 |
| 1963* .. | 1322 | 3·7 | 502 | 3·0 | 839 | 2·3 | 2466 | 3·9 | 5129 | 3·4 |

*தற்காலிகமானவை

மூலம்: தொழிற் திணைக்களம்.

1963ம் ஆண்டின் போது, வேலையிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை, 1962லிருந்ததிலும் பார்க்கச் சற்று உயர்வானதாக இருந்தும், அண்மை வருடங்களில் இருந்தவற்றை விட ஓரளவு குறைவானதாகவே, இருந்தது. வேலையிலமர்த்தப்பட்டோரில் மிகக் கூடியதொகையாஞேர், தேர்ச்சி பெருதோரின் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகும். பதிவு செய்தோர்களின் எண்ணிக்கையில் வேலையில் அமர்த்தப்பட்டோரின் சதவீதம், இவ்வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கே மிகக்கூடியதாக, அதாவது 3.9 சதவீதமாக, விளங்கியது. பதிவு செய்தோர்களின் எண்ணிக்கையில் வேலையிலமர்த்தப்பட்டோரின் சதவீதம், தொழில்நுட்பப் பயிற்சிபெற்ரோர், இலிகிதர் சம்பந்தப்பட்டவரையில், இரண்டாவதாக இருந்தது. இச்சதவீதங்கள், எல்லாத் தொழிலாளர் வர்க்கங்களிடையேயும், பொதுவாக சென்ற வருடத்திலிருந்தவற்றிற்குச் சமமாகவோ அல்லது உயர்வாகவோ இருந்தன.

## தொழில் உறவுகள்

வேலை நிறுத்தங்கள் பற்றிய விபரங்கள், தொழில்-முகாமை உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஓரளவு எடுத்துக்காட்டுகின்றன. வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை, அவற்றில் ஈடுபட்ட தொழிலாளரது எண்ணிக்கை, அதன் பயனுக இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள் முதலியவற்றைப் பின் வரும் அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை II ஈ-2**
**வேலை நிறுத்தங்கள்**

| வருடம் | தோட்டங்கள் | | | ஏனைய தொழில்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்கள் | இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள் | எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்கள் | இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள் |
| 1958 .. | 123 | 39,372 | 340,632 | 96 | 42,713 | 399,228 |
| 1959 .. | 177 | 47,318 | 352,095 | 71 | 42,453 | 460,141 |
| 1960 .. | 123 | 42,528 | 259,948 | 37 | 4,839 | 15,139½ |
| 1961 .. | 90 | 29,223 | 317,866 | 39 | 38,013 | 170,372 |
| 1962 .. | 138 | 42,569 | 193,792 | 50 | 25,730 | 801,882 |
| 1963* .. | 171 | 61,749 | 356,629 | 46 | 20,503 | 235,346 |

*தற்காலிகமானவை

மூலம்: தொழிற் திணைக்களம்.

1963ம் ஆண்டில், தோட்டப்பகுதிகளில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை, 1962ம் ஆண்டிலிருந்தவற்றை விடக் கணிசமான அளவு அதிகரித்து இருக்கையில், ஏனைய பகுதிகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை, வீழ்ச்சியுற்றது. தொழிற் சங்கங்களையுடைய தொழிலாளர்களின் தொகையிற் பெரும்பகுதியாஞேர் வேலை செய்யும் தோட்டப்பகுதியே, ஆகக்கூடிய வேலைநிறுத்தங்களைத் தொடர்ந்தும் பதிவு செய்தது. தோட்டத்தொழிலாளர்களில் ஏறக்குறைய 74.8 சதவீதமாஞேர் தொழிற்சங்கங்களில் அங்கத்தினராக இருக்கின்றனர். தொழிற் சங்கங்களில் அங்கத்தினர்களாக இருக்கும் சகல தொழிலாளர்களிலும், இவர்களின் எண்ணிக்கை 56.1 சதவீதமாக உள்ளது. 1963ம் ஆண்டில் தோட்டங்களிலும் ஏனைய தொழில்களிலும் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள், முறையே, 171 ஆகவும், 46 ஆகவும் இருந்தமை, 1962ம் ஆண்டிற்குரிய 138 உடனும், 50 உடனும் முறையே ஒப்பிடத்தக்கன. தோட்டத்துறையில்

வேலைநிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும் இழக்கப் பட்ட ஆள்வேலை நாட்களும், சென்ற ஆண்டிலிருந்தவற்றை விடக் கூடிய வாக இருந்தன. ஏனைய தொழிற்களிலே, வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவானதாக இருந்தது. இவ்வெண்கள், துறைமுகக் கப்பற்சரக்குக் கூட்டுத்தாபனத்தின் வேலைநிறுத்தம் சம்பந்தமான தரவுகளை, உட்படுத்தவில்லை. இவ்வேலைநிறுத்தம் ஆரம்பத்திலே, உடல் உழைப்பு வர்க்கங்களைச் சேராத தொழிலாளர்களுக்கிடையே தொடங்கப்பட் டது. வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட இத்தொழிலாளர்களின் எண்ணிக்கை, 1963ம் ஆண்டு, கார்த்திகை மாதம் 377லிருந்து, வருடமுடிவில் 1117 ஆக உயர்ந்தது. இதன் விளைவாக, இத்தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினால் 48693 ஆள்வேலைநாட்கள் இழக்கப்பட்டன. உடலுழைப்பு வர்க்கங்களைச் சேர்ந்த 524 தொழிலாளர்கள் 1963ம் ஆண்டு, மார்கழி மாதம், 27ம் திகதி, இவ்வேலை நிறுத்தக்காரர்களோடு சேர்ந்தனர். இவ் உடல் உழைப்பு வர்க்கங் களைச் சேர்ந்த தொழிலாளர்களால் இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்களின் எண்ணிக்கை, 123.7 ஆக இருந்து, ஆள்வேலை நாட்களின் மாதாந்தச் சராசரி எண்ணிக்கையில், 0.7 சதவீதமாக விளங்கியது.

தோட்டத்துறையில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள், 1962ம் ஆண்டிற் குரிய சராசரியாகிய 4.6 நாட்களுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில், சராசரியாக 5.8 நாட்களுக்கு, நீடித்தன. ஏனைய தொழிற்களில் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள், பொதுவாகத் தோட்டப்பகுதிகளிலுள்ளவற்றை விட நீண்டகாலத்திற்கு நீடித்தவையாகும். இவ்வேலை நிறுத்தங்களின் நீடிப் பானது, 1962லிருந்த சராசரியாகிய 31.2 நாட்களிலிருந்து, 1963ம் ஆண்டில் 11.5 நாட்களுக்குத் திட்சணமாகக் குறைக்கப்பட்டது.

தொழிற்திணைக்களம் செய்த பாகுபாட்டின்படி வேலை நிறுத்தங்களுக் காகக் கொடுக்கப்பட்ட காரணங்களை நோக்குமிடத்து, தோட்டவிதிகள், ஒழுக்கக்கட்டுப்பாடு, வேலையாட்களின் ஒழுக்கங்கள் முதலியவை, மொத்த வேலை நிறுத்தங்களில், 33.7 சதவீதமானவைக்குக் காரணமாகவும், வேலை நீக்கம் அல்லது வேலை இழப்பு முதலிய காரணங்கள், 18.8 சதவீதமான வைக்கும், கூலிகொடாமை, கூலிகொடுப்பதிற் சுணக்கம் போன்ற கூலித் தகராறுகள், 8.4 சதவீதமானவைக்கும் காரணமாக இருந்தன. இக் காரணங்களைப் பற்றிய வேலை நிறுத்தங்கள் பெரும்பாலும் தோட்டங்களில் ஏற்பட்டவையாகும். கூலி உயர்வு பற்றிய கோரிக்கைகள், மொத்த வேலை நிறுத்தங்களில், 2.5 சதவீதமானவைக்குக் காரணமாக இருந்தன.